பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்!

# புகை - அதற்கு கொடுப்போம் விடை!

பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் சிக்கி தவிக்கும் உலக மக்களின் கவனம் மே 31ஆம் தேதி அன்று, சாதாரண விஷயமாக கருதப்படும் ஒரு தீமையைப்பற்றி எல்லா பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளின் வாயிலாக திருப்பப்பட்டது. பெரும்பாலான மக்கள் இத்தீமையை சாதாரணமாக கருதினாலும், அது ஏற்படுத்தும் பாதிப்போ பாதகமானவை. முதலிலே அத்தீமை ஏற்படுத்தும் பாதிப்புகளை தெரிந்துக் கொண்டு, பிறகு அத்தீமை எது என்பதை தெரிந்துக்கொள்வோம்.

- *காச நோய்!*
- *நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்!*
- *இருதய நோய் மற்றும் குருதிக் (இரத்தக்) குழல் நோய்!*
- *புற்று நோய்!*
- *ஆண்மை குறைவிற்கான சாத்தியக்கூறுகள்!*

இவ்வளவு கொடூரமான விளைவுகளை ஏற்படுத்தம் இத்தீய பழக்கம் வெறொன்றுமில்லை. Smoking is Injuries to Health (புகைப்பிடித்தல் உடல் நலத்திற்கு தீங்கானது) என்று கொட்டை எழுத்துக்களில் எழுதப்பட்ட பாக்கெட்டுகளிலிருந்து நாம் எடுத்து ஊதும் பீடி மற்றும் சிகரெட்கள்தான் இவ்வளவு மாபாதகங்களை விளைவிக்கிறது.

**“புண்பட்ட மனதை புகைப்பிடித்து ஆற்று”** என்று விதாண்டவாதம் பேசி ஊதி தள்ளுவதால் ஏற்படும் ரணங்களுக்கு எந்த மருந்தும், மாத்திரைகளும் அந்த ரணங்களை ஆற்றாது என்பது அறிவியல் உலகம் கூறும் நிதர்சனமான உண்மை. எனவேதான் இத்தீமைக்கு எதிராக அரசுகளும், தன்னார்வ அமைப்புகளும் உலகளாவிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

புகையிலை அதை உபயோகப்படுத்தும் 50 சதவீத மக்களை கொல்கிறது என்ற உண்மையை **“உலக சுகாதார மையம்”** (World Health Organization - WHO) வெளியிட்டுள்ளது. தற்போது உலக மக்கள் தொகையில் 1.3 பில்லியன் மக்கள் புகைப் பிடிப்பவர்கள் என்ற புள்ளிவிவரத்தை உலக சுகாதார மையம் வெளியிட்டுள்ளது. இந்த கணக்குப்படி பார்த்தால், உலகில் 650 மில்லியன் மக்கள் இக்கொடிய பழக்கத்தால் மரணிக்கின்றார்கள்.

**எந்த போர்களும், இயற்கை பேரழிவுகளும், கொடிய விபத்துக்களும் ஏற்படுத்தாத மாபாதக்கை இந்த ஊதி தள்ளும் பழக்கம் ஏற்படுத்துகிறது என்றால், கல் நெஞ்சங்களை கரைய வைக்கும் இப்புள்ளி விவரம், புகைப்பிடிப்பவர்களின் நெஞ்சங்களை உறைய வைத்து இக்கொடிய பழக்கத்தை விட்டு ஒழிக்க வழிகோலுமா?**

- ❖ *20 வயதிற்கு உட்பட்டவர்கள் இனி சிகரெட் வாங்க முடியாது என துபை அரசாங்கம் அறிவிப்பு!*
- ❖ *பொது இடமான ஷாப்பிங் மால்களில் புகை பிடிப்பதற்கு தடை என ஷார்ஜா அரசாங்கம் அறிவிப்பு!*
- ❖ *யு.கே. மற்றும் ஜெர்மனி நாடுகளில் சிகரெட் வாங்குவதற்கு 16 - 18 வயது இருக்க வேண்டும் என அறிவிப்பு!*
- ❖ *அமெரிக்க மற்றும் கனடா நாடுகளில் சிகரெட் வாங்குவதற்று 18 - 19 வயது இருக்க வேண்டும் என அறிவிப்பு!*
- ❖ *வேஷைக்காட்சிகளின் தொகுப்பான சினிமாதான் நிஜம் என்று பெரும்பாலோர் நம்புவதால், சினிமா நடிகர்கள் புகைப் பிடிக்கும் காட்சிகளில் நடிக்கக்கூடாது என இந்திய சுகாதாரத்துறை அமைச்சரின் வேண்டுகோள்!*
- ❖ *புகையிலை உபயோகத்தை கட்டுப்படுத்த, குறிப்பாக படிப்பறிவு இல்லாதவர்களிடமும், ஏழைகளிடமும் தக்க விழிப்புணர்வை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என இந்திய சுகாதாரத்துறை அமைச்சரின் அறிவிப்பு!*

என இக்கொடுமைக்கு எதிராக அரசாங்கங்களும் களம் இறங்கியுள்ளன. இருந்தபோதிலும், மக்களை கவரும் விளம்பரங்களுடன் புகையிலை நிறுவனங்கள் விளம்பர சந்தையில், மக்களை சிறிது சிறிதாக அழிக்க கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றன.

மிக கொடிய தாக்கத்தை ஏற்படுத்தும் புகைப்பழக்கத்தைப்பற்றி இஸ்லாமிய மார்க்கம் என்ன தான் சொல்கிறது?

புகைபிடித்தல் என்பது மார்க்கத்திற்கு மாற்றமான ஒரு வீணான காரியமாகும். இது உடலுக்கு கேடானது மட்டுமல்லாமல் வீண் விரையமாகும். நம்முடைய உடலுக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்வதை திருமறைக் குர்ஆன் கடுமையாகக் கண்டிக்கிறது.

**“உங்கள் கைகளால் நாசத்தைத் தேடிக் கொள்ளாதீர்கள்!” (அல்குர்ஆன் 2:195)**

**“உங்களையே கொன்று விடாதீர்கள்! அல்லாஹ் உங்கள் மீது நிகரற்ற அன்புடை யோனாக இருக்கிறான்!” (அல்குர்ஆன் 4:29)**

**“வீண் விரையம் செய்யாதீர்கள்! வீண் விரையம் செய்வோரை அவன் நேசிக்க மாட்டான்!” (அல்குர்ஆன் 6:141)**

**“உண்ணுங்கள்! பருகுங்கள்! வீண் விரையம் செய்யாதீர்கள்! வீண்விரையம் செய்வோரை அவன் விரும்ப மாட்டான்!” (அல்குர்ஆன் 7:31)**

**விரையம் செய்வோர் ஷைத்தான்களின் உடன்பிறப்புக்களாக உள்ளனர். ஷைத்தான் தனது இறைவனுக்கு நன்றி கெட்டவனாக இருக்கிறான். (அல்குர்ஆன் 17:27)**

மேற்கண்ட வசனங்கள் அனைத்தும் நமக்கு நாமே தீங்கிழைத்துக் கொள்ள தடை செய்துள்ள நிலையில், புகை பிடித்தல் எவ்வளவு கடுமையான குற்றம் என்பதை நமக்கு தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இறைவன் ஒரு செயலை தடைசெய்து விட்டான் என்றால் அதை விட்டும் தவிர்ந்து கொள்ள வேண்டும். மாறாக அதைப் பற்றி வீணான கேள்விகளைக் கேட்பது கூடாது. புகை பிடித்தல் என்பது ஒரு மோசமான தடை செய்யப்பட்ட காரியமாகும். இதனை எல்லாக் காலங்களிலும் கண்டிப்பாகத் தவிர்ந்து கொள்ளவேண்டும்.

## கரியாகும் காசு

தினசரி புகைபிடிக்கும் பழக்கம் உள்ளவர்கள் தங்களை அறியாமலேயே லட்சக்கணக்கான ரூபாயை கரியாக்கி வருகின்றனர் என்பது அதிர்ச்சி தரும் உண்மையாகும்.

இன்று ஒரு சாதாரண சிகரெட்டின் குறைந்த பட்ச விலை 0.30 ஃபில்ஸ். ஒரு நாளைக்கு ஒரு பாக்கெட் அதாவது 10 சிகரெட் குடித்தால் ஒரு நாள் செலவு 3.00 திர்ஹம். ஒரு மாதத்திற்கு 90.00 திர்ஹம். ஒரு வருடத்திற்கு 1090.00 திர்ஹம். பத்து வருடத்திற்கு 10,900.00 திர்ஹம்.

இப்படியே 15-20 வருடம் என கூட்டிப் பார்த்தேமேயானால் பல லட்ச ரூபாய் கரியாகி உள்ளதை உணரலாம். இந்த செலவு மட்டுமல்லாமல் புகைப்பிடிப்பதால் உண்டாகும் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அது இது வென மருத்துவர்களுக்கு செலவழிக்கும் காசு என்று எல்லாவற்றையும் கூட்டிப் பார்த்தால் பெரும் தொகை பாழாக்கப்பட்டுள்ளதை உணரலாம். இந்த பணத்தை முறையாக சேர்த்து வைத்திருந்தால் எத்தனை விஷயங்களில் பயன்பட்டிருக்கும்...? சிந்திக்க வேண்டாமா??

நாம் புகைப்பிடித்து கரியாக்கும் ஒவ்வொரு காசுக்கும் வல்ல ரஹ்மானிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

**"எல்லா போதைப் பொருள்களும் மதுவைப் போன்றது. மது தடை செய்யப்பட்டுள்ளது." அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர்(ரலி), நூல்: புஹாரி**

**"(பின்வரும்) கேள்விகளுக்கு பதிலளிக்காத வரை மறுமையில் ஒரு அடியானின் பாதம் நகராது.**

**தன்னுடைய வாழ்வை எப்படி கழித்தாய்? என்பதைப் பற்றியும், தனக்கு வழங்கப்பட்ட கல்வியை எந்தளவிற்கு செயல்படுத்தினாய்? என்பதைப் பற்றியும், எப்படி சம்பாதித்தாய்? எப்படி செலவழித்தாய்? எனவும், தன்னுடைய உடலை எப்படி செலவழித்தாய்? எனவும் (கேள்வி கேட்கப்படும்)"**

**அறிவிப்பவர்: அபீ பர்ஸா(ரலி) நூல்: திர்மிதீ**

எல்லாவற்றிற்கும் மேலாக ஆரோக்கியமும், உடலும் வல்ல அல்லாஹ் கொடுத்த வரங்கள். அதை நம்முடைய கைகளால் பாழ்படுத்திக் கொள்வதைப்பற்றி மறுமையில் கேள்வி உண்டு. அல்லாஹ் தன் திருமறையில்...

**"பின்னர் அந்நாளில் அருட்கொடை பற்றி விசாரிக்கப்படுவீர்கள்!" (அல்குர்ஆன் 102:8)**

புகைப்பிடிப்பவர்கள் புகைப்பிடிப்பதால் தன்னுடைய உடல் ஆரோக்கியத்தை கெடுத்துக்கொள்வது மட்டுமின்றி, தன்னை சுற்றி இருப்பவர்களின் ஆரோக்கியத்தையும் கெடுக்கின்றனர். இவ்வாறு செய்வது ஒரு இறை நம்பிக்கையாளனின் பண்பாக இருக்காது.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்...

**"எவரது நாவு மற்றும் கையின் தொல்லைகளிலிருந்து பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெறுகிறார்களோ அவரே (உண்மையான) முஸ்லிம் ஆவார். எவர் அல்லாஹ் தடைவிதித்தவற்றிலிருந்து விலகிக்கொண்டாரோ அவரே முஹாஜிர் (துறந்தவர்) ஆவார்" அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் அம்ர்(ரலி) நூல்: புஹாரி 10**

எனவே, மறுமையை நம்பக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமும் புகைப்பழக்கம் என்ற கொடிய பழக்கத்தை விட்டு ஒதுங்கி, வல்ல இறைவனிடம் பாவ மன்னிப்பு தேடி, மற்றவர்களின் உடல் நலத்தையும் கெடுக்காமல் இருக்க சபதம் எடுக்க வேண்டும். இல்லையெனில் அல்லாஹ்வின் பிடி மிகவும் கொடியது என மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும்.

வல்ல ரஹ்மான் நம் அனைவரையும் ஷைத்தானின் அனைத்து வித தாக்கங்களிலிருந்து காப்பாற்றுவானாக.

# கல்வி விழிப்புணர்வு முகாம்!

## வேலூர் மண்டலம்

**இன்ஷா அல்லாஹ் T.N.T.J. மாணவரணி நடத்தும் இந்த முகாமில் மாணவ, மாணவியர்களின் எதிர்கால கல்வி குறித்த ஆலோசனைகளை சிறந்த கல்வி வல்லுணர்கள் வழங்க இருக்கின்றார்கள்.**

### பேர்ணாம்பேட்

**நாள்: 21-06-2008 சனி காலை 10 மணி**

**இடம்:** முஹம்மதியா பள்ளிவாசல், (புதிய பஸ் நிலையம் அருகில்)

**தொடர்புக்கு:** வேலூர் - ஃபயாஸ் 9791320205

திருவண்ணாமலை - இஸ்மாயில் 9442811980

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி - ஜஹாங்கீர் 9443212388

## தஞ்சை மண்டலம்

### திருவாரூர்

நாள்: 22-06-2008 ஞாயிறு காலை 10 மணி

இடம்: பிர்தவ்ஸ் மண்டபம், ஜின்னா தெரு

### பட்டுக்கோட்டை

நாள்: 22-06-2008 ஞாயிறு காலை 10 மணி

இடம்: தவ்ஹீத் மர்கஸ், பள்ளிவாசல் தெரு, வடசேரி ரோடு

தொடர்புக்கு: தஞ்சை (வடக்கு) - ஜாபர் 9894123898

சாகுல் 9944338848

தஞ்சை (தெற்கு) - சாதிக் பாட்சா 9442398390

திருவாரூர் - அன்சாரி 9965986113

நாகை (வடக்கு) - புஹாரி 9894314523

நாகை (தெற்கு) - சாஹிப் 9444153378

காரைக்கால் - சுல்தான் அப்துல் காதர் 9842132958

வெளியீடு: 122 அன்புடன் வெளியிடுவோர்... நாள்: 20-06-2008

**ஜமாஅத்துத் தவ்ஹீத் (TNTJ) – துபை**

**தொலைபேசி : 04-2715830**

நோட்டீஸ் அன்பளிப்பு: **பனைக்குளம் தவ்ஹீத் ஜமாஅத் - துபை**